# ஆண்டு மலர்

# 2020-21




**அரசு கல்வியியல் கல்லூரி,**

**குமாரபாளையம் - 638183**

**நாமக்கல் மாவட்டம்**

Scanned with CamScanner

# ஆண்டுமலர் *2020-21*


**அரசு கல்வியியல் கல்லூரி,**

**குமாரபாளையம் *-638183***

***Website: www.gcekpm.ac.in***



Scanned with CamScanner




**முனைவர் அ. ஜான் பீட்டர்,**
**கல்லூரி முதல்வர்**

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல்   குறள் :517**

*பொருள்: ஒரு செயலை இவ்வவ் வழிமுறைகளால் இவன் முடித்தல் கூடும் என்று கண்டறிந்து அதனைக் கண்டறிந்து அவனிடம் ஒப்படைத்தல் வேண்டும்*



Scanned with CamScanner




முதல்வர்,
கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள்



Scanned with CamScanner



Dr. V. KALAISELVI,

**முதல்வர் பணிஉயர்வு**

இக்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய முனைவர் வெ. கலைச்செல்வி பணி உயர்வு பெற்றுக் கோயமுத்தூர் கல்லூரிக் கல்வி இணை இயக்குநராகப் பொறுப்பேற்கும் விதமாக **21.09.2020** அன்று இக் கல்லூரியிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

**முதல்வர் பணியேற்பு**

ஒரத்தநாடு அரசு கல்வியியல் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய முனைவர் அ.ஜான் பீட்டர் அவர்கள், அரசாணை(நிலை) எண் **143** உயர்கல்வித்(எப்**1**)துறை நாள் **13.10.2020** இன்படி **15.10.2020** அன்று இடப்பெயர்வு பெற்று இக்கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.




**ஆசிரியர்கள் மாறுதல்**

அரசாணை நிலை எண் **142** உயர்கல்வித்(எப்**1**)துறை நாள் **13.10.2020** இன் படி பல்வேறு அரசு கல்லூரிகளிலிருந்து இக்கல்லூரிக்கு பேராசிரியர்கள் பணிமாற்றம் செய்யப்பட்டனர்.

செய்யாறு அரசு கலைக்கல்லூரியிலிருந்து ஆங்கில இணைப்பேராசிரியர் **முனைவர் செ.பார்த்திபன்,**

விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியிலிருந்து கணிதவியல் உதவிப் பேராசிரியர் **முனைவர் எஸ். லெட்சுமிநாராயணன்,**

சேலம் **7** அரசு கலைக்கல்லூரியிலிந்து இயற்பியல் உதவிப் பேராசிரியர் **முனைவர் மா.அருணாசலம்,**

ராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரியிலுருந்து வரலாற்று உதவிப் பேராசிரியர் **முனைவர்** க.மா வெங்கடேசன்,



Scanned with CamScanner

கோயமுத்தூர் அரசு கலைக்கல்லூரியிலிருந்து புவியியல் உதவிப்பேராசிரியர் **முனைவர் த.யுவராஜ்** (கல்வியியல் உதவிப் பேராசிரியர்)

மயிலாடுதுறை தருமபுரம் ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரியிலிருந்து அண்ணாமலை பல்கலைக்கழக மிகைப்பணி உதவிப்பேராசிரியர் **முனைவர் எஸ். வைரமணி** ஆகியோர் இக்கல்லூரியல் பணியேற்றனர்.

மேலும் இக்கல்லூரியில் கல்வியியல் உதவிப் பேராசிரியர் **முனைவர் வெ.மனோகரன்** தமிழ் உதவிப் பேராசிரியராகவும் இவ்வாணையினால் மாற்றப்பட்டிருக்கிறார்.

**மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன ஆசிரியர்கள் மாற்றுப்பணி**

ஆசிரியர் பணியிட பற்றாக்குறையை நிறைவு செய்யும் விதமாக மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன விரிவுரையாளர்கள் கல்வியியல் கல்லூரிகளில் உதவிப்பேராசிரியர்களாக மாற்றுபணியாக ஓராண்டிற்கான ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருப்பதாக அரசாணை நிலை எண் **142** உயர்கல்வித்(எப்**1**)துறை நாள் **13.10.2020** இன் படி உத்தரவிடப்பட்டது.

, திருமூர்த்திநகரில் அமைந்துள்ள திருப்பூர் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலிருந்து திருமதி **சா.மேபல் சொரூபராணி** அவர்களும்,

குருக்கத்தியில் அமைந்துள்ள நாகப்பட்டினம் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலிருந்து திரு. **எஸ்.சின்னப்பராஜ்** அவர்களும்

நாமக்கல் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலிருந்து திரு. தங்கவேல் அவர்களும்

காளையார்கோவிலில் அமைந்துள்ள சிவகங்கை மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலிருந்து **எஸ். சரளா** அவர்களும்,

குமுளூரில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திலிருந்து முனைவர் **ஹெலன் எட்வர்ட்** அவர்களும் இந்நிறுவனத்தில் பணியேற்றனர்.

**பல்கலைக்கழக ஏற்பாணை பெற்று தே.ஆ.க.நி அனுப்பியமை**

இந்நிறுவனத்தில் பணியேற்ற முதல்வர் மற்றும் **11** இணை\உதவிப்பேராசிரியர்களுக்குப் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்திலிருந்து ஏற்பாணைப் பெறப்பட்டு தேசிய ஆசிரியர் கல்வியியல் மையத்திற்கு **(NCTE)** அனுப்பிவைக்கப்பட்டது.

**புதிய இணையத்தளம் உருவாக்கம்**

கல்லூரியின் புதிய இணையதளம் www.gcekpm.ac.in என்ற முகவரியோடு மேம்படுத்தப்பட்டு தொடங்கப்பட்டது.

**ஆசிரியப் பயிற்சிக்கு மாணவர்கள் அனுப்பி வைப்பு**

கொரோனா தொற்றுகாரணமாக கல்விநிலையங்களில் விடுதிகள் செயல்படாமை மற்றும் கல்விநிறுவனங்களில்நேரடி வகுப்புகள் செய்லபட அனுமதிவழங்கப்படாமை ஆகிய காரணங்களால் மாணவர்கள் அவரவர் இருப்படித்திற்கு அருகிலேயே செயல்படும்



Scanned with CamScanner

பள்ளிகளில் ஆசிரியப்பயிற்சி மேற்கொள்ள பல்கலைக்கழகம் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து **19** மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அனுமதி பெற்று கீழ்க்கண்டவாறு மாணவர்கள் ஆசிரியர் பயிற்சி பெறுவதன் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டனர்**.**

அரியலூர் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | நந்தினி. நா | 1140919BD059 | விலங்கியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, மேலணிக்குழி - 612903 |

திருச்சிராப்பள்ளிமாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | தனலெட்சுமி. ச | 1140919BD021 | வரலாறு | UG | அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மண்ணச்சநல்லூர் 621005 |
| 2 | சூர்யா. மு | 1140919BD092 | விலங்கியல் | UG | செங்குந்தர் ல்நிலைப்பள்ளி, துறையூர் 621010 |

கரூர் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | இராகவி. இரா | 1140919BD069 | ஆங்கிலம் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, தென்னிலை, கரூர் |
| 2 | ராஜலட்சுமி. த | 1140919BD071 | கணிதவியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, நாகம்பள்ளி, மலைக்கோவிலூர் |

கிருஷ்ணகிரி மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | அருள்மொழி. மு | 1140919BD007 | தாவரவியல் | PG | ஜான் பிரிட்டோ மேல்நிலைப்பள்ளி, கோட்டைஉளிமங்கலம் |
| 2 | பிரியா. வி | 1140919BD065 | வேதியியல் | UG | புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, சேசுராஜபுரம், கிருஷ்ணகிரி |

மதுரை மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | லோகலெட்சுமி. கா | 1140919BD049 | தமிழ் | PG | சௌராஷ்ட்ரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அனுப்பானடி மதுரை 625009 |

இராமநாதபுரம் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | மாடத்திபாபு. சு | 1140919BD050 | இயற்பியல் | PG | செய்யது அம்மாள் மேல்நிலைப்பள்ளி, |



Scanned with CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | கேணிக்கரை, வெளிப்பட்டினம். ராமநாதபுரம் |

சேலம் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | கௌதமி. சு | 1140919BD030 | தமிழ் | UG | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, புதுத்தெரு கிச்சிப்பாளையம் 636 015 |
| 2 | இந்துமதி. ஆ | 1140919BD032 | கணிதவியல் | UG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கோட்டை மெயின்ரோடு, சேலம் |
| 3 | கற்பகம். த | 1140919BD040 | விலங்கியல் | PG | கே. ஏ. நாச்சியப்பா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, கொங்கணாபுரம் 637 102 எடப்பாடி |
| 4 | கிருபாகரன். ம | 1140919BD045 | வேதியியல் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, கோனூர் |
| 5 | லாவண்யா த | 1140919BD048 | தாவரவியல் | PG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கோட்டை மெயின்ரோடு, சேலம் |

ஈரோடு மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | ராதிகா. ரா | 1140919BD068 | தாவரவியல் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைக்கள்ளி, பெருந்துறை 638052 |
| 2 | பாரதி.ம | 1140919BD015 | வேதியியல் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைக்கள்ளி, பெருந்துறை 638052 |
| 3 | சரண்யாதேவி. நா | 1140919BD082 | விலங்கியல் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெருந்துறை 638052 |
| 4 | மோகனப்பிரியா.வே | 1140919BD055 | ஆங்கிலம் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, குள்ளம்பாளையம்,கோபி |
| 5 | முகிதாபேகம். ஜி | 1140919BD057 | கணிதவியல் | PG | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அந்தியூர் |
| 6 | காவியா.ம | 1140919BD043 | தாவரவியல் | UG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கவுந்தப்பாடி 638455 |
| 7 | நந்தக்குமார்.கா | 1140919BD058 | இயற்பியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, ஏழூர் |
| 8 | சங்கீதா.அ | 1140919BD080 | ஆங்கிலம் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, தொட்டம்பாளையம் |
| 9 | மங்கையர்கரசி,த | 1140919BD051 | இயற்பியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, நெரிஞ்சிப்பேட்டை, அந்தியூர் |
| 10 | தமிழரசி.ஜெ | 1140919BD093 | கணிதவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, நெரிஞ்சிப்பேட்டை, அந்தியூர் |



Scanned with CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | ஜனனி.ரா | 1140919BD034 | விலங்கியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பெரியபுலியூர் |
| 12 | பிரதீவ்ராஜ்.தி | 1140919BD064 | வரலாறு | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பொலவக்காளிப்பாளையம் |
| 13 | மணிகண்டன்.ஆ | 1140919BD052 | கணிதவியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, ரைஸ்மில் புதூர், நல்லாம்பட்டி |
| 14 | அருண்குமார். மு | 1140919BD008 | தமிழ் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, கள்ளிப்பட்டி |
| 15 | பவித்ரா.மா | 1140919BD061 | வேதியியல் | UG | அரசு வினோபா மேல்நிலைப்பள்ளி, தளவாய்ப்பேட்டை |
| 16 | ஷோபிகா.ர | 1140919BD086 | கணிதவியல் | PG | இரயில்வே காலனி நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கொல்லாம்பாளையம் |
| 17 | சௌமியா.மு | 1140919BD089 | ஆங்கிலம் | PG | இரயில்வே காலனி நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கொல்லாம்பாளையம் |
| 18 | திவ்யா.ந | 1140919BD023 | வரலாறு | PG | இரயில்வேகாலனி நகராட்சி மேல்நிலைப்பள்ளி, கொல்லாம்பாளையம் |
| 19 | கபில்குமார்.நா | 1140919BD037 | வேதியியல் | PG | எம்.பி. தெய்வசிகாமணி அரசு மேல்நிலைப்பள்ளி, திங்களூர்,பெருந்துறை |
| 20 | ஜெமிமா நேச ஷாரோன். டே | 1140919BD036 | கணிதவியல் | PG | எம்.பி.தெய்வசிகாமணி அரசு மேல்நிலைப்பள்ளி, திங்களூர், பெருந்துறை, 638055 |
| 21 | அழகேசன். தோ | 1140919BD002 | விலங்கியல் | PG | காமராஜர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கருங்கல்பாளையம் |
| 22 | பிரசாந்த். வ | 1140919BD063 | ஆங்கிலம் | UG | காமராஜர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கருங்கல்பாளையம் |
| 23 | தனலட்சுமி.கா | 1140919BD019 | கணிதவியல் | PG | நகராட்சி மேல்நிலைப்பள்ளி, பெரியமொடச்சூர், கோபி |

நாமக்கல் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | கலையரசன்.ச | 1140919BD038 | கணிதவியல் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 2 | கவின்ராஜ். ச | 1140919BD042 | கணிதவியல் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |



Scanned with CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | சிவா. ம | 1140919BD087 | தமிழ் | PG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 4 | பாலாஜி. ம | 1140919BD010 | இயற்பியல் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 5 | கணேஷ் குமார். க | 1140919BD025 | தமிழ் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 6 | ஜீவானந்தம். நா | 1140919BD035 | தமிழ் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 7 | ரமேஷ் ராஜா. வீ | 1140919BD074 | இயற்பியல் | UG | அரசு உயர்நிலைப் பள்ளி, படைவீடு |
| 8 | ஹேமமாலினி ச. ப | 1140919BD031 | கணிதவியல் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, அருவங்காடு, குமாரபாளையம் |
| 9 | பாஸ்கரன். சி | 1140919BD014 | வேதியியல் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, குப்புச்சிப் பாளையம் |
| 10 | பாலமுருகன். ரா | 1140919BD011 | தமிழ் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, படைவீடு |
| 11 | சந்திரகுமார். வெ | 1140919BD017 | கணிதவியல் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, படைவீடு |
| 12 | கோகுல் க | 1140919BD028 | விலங்கியல் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, படைவீடு |
| 13 | பெரியசாமி. மோ | 1140919BD062 | இயற்பியல் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, வேமன்காட்டுவலசு, குமாரபாளையம் |
| 14 | மேகலா. சி | 1140919BD054 | ஆங்கிலம் | PG | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 15 | பிரியதர்சினி. ச | 1140919BD067 | ஆங்கிலம் | UG | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 16 | ரேணுகா. இர | 1140919BD076 | ஆங்கிலம் | UG | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, குமாரபாளையம் |
| 17 | இந்துமதி. செ | 1140919BD033 | வேதியியல் | UG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு |
| 18 | தமிழரசி. மு | 1140919BD094 | கணிதவியல் | UG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு |
| 19 | திரேகா. பா | 1140919BD098 | வேதியியல் | PG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, மோகனூர் முதன்மைச்சாலை, நாமக்கல் |
| 20 | பவித்ரா. ம | 1140919BD060 | கணிதவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, எளச்சிப்பாளையம், திருச்செங்கோடு |
| 21 | உதயகுமார். செ | 1140919BD099 | கணிதவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, திம்மநாயக்கன்பட்டி, 636202 |
| 22 | பரணி. ந | 1140919BD012 | தமிழ் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 23 | கிருஷ்ணமூர்த்தி. ந | 1140919BD047 | வேதியியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 24 | தமிழ்செல்வன். ப | 1140919BD096 | தாவரவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |



Scanned with CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | ஆனந்த். வெ | 1140919BD003 | கணிதவியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 26 | மணிகண்டன். அ | 1140919BD053 | வரலாறு | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 27 | ரமணி. ரா | 1140919BD073 | தாவரவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 28 | ராஜா. ச | 1140919BD070 | வேதியியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 29 | செந்தில்ராஜா. தி | 1140919BD085 | ஆங்கிலம் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 30 | சுகுமார். ப | 1140919BD091 | ஆங்கிலம் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 31 | ராஜலிங்கம். கி | 1140919BD072 | தமிழ் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 32 | சக்தி. பா | 1140919BD078 | கணிதவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, பல்லக்காபாளையம் |
| 33 | தனலட்சுமி. மா | 1140919BD020 | வேதியியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, மங்களபுரம், ராசிபுரம் |
| 34 | அஞ்சனா. ர | 1140919BD004 | ஆங்கிலம் | UG | அரசு மேல்நில்ப்பள்ளி, செல்லப்பம்பட்டி |
| 35 | மோனிகா. ஜெ | 1140919BD056 | வேதியியல் | UG | கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பள்ளிப்பாளையம் |
| 36 | சவுமியா. ப | 1140919BD090 | கணிதவியல் | UG | கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பள்ளிப்பாளையம் |
| 37 | பிரியதர்ஷினி. பா | 1140919BD066 | தமிழ் | UG | கிருஷ்ணவேணி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, பள்ளிப்பாளையம் |
| 38 | தமிழ்மணி . மா | 1140919BD095 | கணிதவியல் | PG | புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, திருச்செங்கோடு |

திருப்பூர் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | அபிதா. ப | 1140919BD001 | தாவரவியல் | PG | ஜெய்வாபாய் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்பூர் |
| 2 | பசிலாஜனோபர். ஜ | 1140919BD013 | விலங்கியல் | UG | பழனியம்மாள் நகராட்சி மேல்நிலைப்பள்ளி, திருப்பூர் |
| 3 | கீதா. கோ | 1140919BD027 | வரலாறு | UG | அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, பெருமாநல்லூர்641 666 |
| 4 | விக்னேஷ் குமரன். ம | 1140919BD100 | கணிதவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, எலுகாம்வலசு, தருமபுரம், திருப்பூர் 638673 |

கோயமுத்தூர் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | அறிவழகி. ரா | 1140919BD006 | கணிதவியல் | PG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, தொண்டாமுத்தூர் |



Scanned with CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | கணேஷ்ராம். ப | 1140919BD026 | கணிதவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, அரசூர், கோவை |
| 3 | காவியா. ரா. ரா | 1140919BD044 | ஆங்கிலம் | UG | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சூலூர், கோவை |

## கடலூர் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | கலையரசி. ம | 1140919BD039 | ஆங்கிலம் | UG | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பெண்ணாடம் |

## விருதுநகர் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | சித்ரா. பி | 1140919BD018 | இயற்பியல் | PG | சேத்தூர் சேவுகபாண்டிய அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராஜபாளையம் 626117 |
| 2 | சங்கரீஷ்வரி. போ | 1140919BD081 | தமிழ் | PG | எஸ். ஆர். என் அரசு மேல்நிலைப்பள்ளி, திருத்தங்கல் – 626130 |

## விழுப்புரம் மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆஷா. அ | 1140919BD009 | வரலாறு | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, விக்கிரவாண்டி |
| 2 | திவ்யா. ஏ | 1140919BD022 | வரலாறு | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, நொளம்பூர் 604307 |
| 3 | எழில்மதி . ஏ | 1140919BD024 | தாவரவியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, விக்கிரவாண்டி |
| 4 | சபினா. இரா | 1140919BD077 | தாவரவியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, வழுதாவூர் 605502 |

## தரும புரி மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | புவனேஸ்வரி. கோ | 1140919BD016 | ஆங்கிலம் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, எர்ப்பட்டி பென்னாகரம் |
| 2 | சக்திவேல் . க | 1140919BD079 | கணிதவியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, ஜக்கசமுத்திரம் |
| 3 | அர்ச்சனா. இரா | 1140919BD005 | கணிதவியல் | PG | அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மொரப்பூர், அரூர் |
| 4 | கருப்புசாமி. செ | 1140919BD041 | விலங்கியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, பண்டஹள்ளி 636803 |
| 5 | கோகிலா. மா | 1140919BD046 | கணிதவியல் | UG | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கம்பைநல்லூர் |
| 6 | ரம்யா. க | 1140919BD075 | கணிதவியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, ஏலகிரி, தருமபுரி |



Scanned with CamScanner

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | சதீஷ். மா | 1140919BD083 | கணிதவியல் | UG | அரசு மேல்நிலைப்பள்ளி, வே. முத்தம்பட்டி தர்மபுரி 635301 |
| 8 | அழகேசன். தோ | 1140919BD002 | விலங்கியல் | PG | அரசு மேல்நிலைப்பள்ளி, ஏரியூர் |

புதுக்கோட்டை மாவட்டம்

| வ.எண் | பெயர் | பதிவெண் | பாடம் | நிலை | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | சிவராமு. கு | 1140919BD088 | கணிதவியல் | UG | அரசு உயர்நிலைப்பள்ளி, கருப்புக்குடிப்பட்டி |

**ஆன்லைன் தேர்வுகள்**

**2019-2021** அணி மாணவர்களுக்கான இரண்டாம் ஆண்டுத் தேர்வுகள் கொரோனா தொற்று காரணமாக ஆன்லைன் வழியில் நடத்தப்பட்டன. மேலும் செய்முறைத் தேர்வுகளும் பல்கலைக்கழக வழிகாட்டுதல் படி ஆன்லைன் முறையில் நடத்தப்பட்டது

**மாணவர் சேர்க்கை** 2020-22

உயர்கல்விச்செயலாளர் தே.ஆ.க.மையத்தின் உயர் அலுலர்களிடம் விடுத்த உறுதியளிப்பின் அடிப்படையில் தே.ஆ.க.மையம் **2020-22** ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடத்த அனுமதி அளித்த து. இதன்படி **8.03.2021** முதல்**23.08.2021** வரை மாணவர் சேர்க்கை நடைபெற்றது.

**ஆன்லைன் வகுப்புகள்**

தமிழக அரசின் கொரோனா நோய்தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளின் படி, இக்கல்லூரி வளாகத்தில் கொரோனா சிகிச்சை மையம் செயல் படுவதால் மாணவர்களுக்கு மட்டும் கல்லூரி வருவதினின்று விலக்கு அளிக்கப்பட்டு, விடுமுறை அளிக்கப்பட்டு ஆன்லைன் வழியில் வகுப்புகள் நடத்தப்பட்டன. **பின்னர் ஆசிரியர்களுக்கும் கல்லூரி வருவதினின்று விலக்களிக்கப்பட்டு செப்டம்பர் 1 முதல் நேரடி வகுப்புகள் நடத்தப்பட்டன**.

**மாணவர் இணைப்பு மற்றும் ஒருமுகப்பயிற்சி**

முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை நிறைவுற்ற நிலையில் பின்னர் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு நேரடி வகுப்புத் தொடக்கவிழாவும் ஒருமுகப்பயிற்சியின் தொடக்க விழாவும் கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி முதலவர் தலைமையில் கல்லூரி பேராசிரியர்கள் இந்த ஒருமுகப்பயிற்சியை நடத்தினர். மாணவர்கள் சீருடையுடன் இந்நிகழ்வில் பங்கேற்றனர் .



Scanned with CamScanner

**கல்வி உதவித்தொகை**

2020-21 ஆம் கல்வியாண்டில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகிப்பு மாணவர்கள் **67** பேருக்கு ரூ. **3,06,525** தொகையும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர்கள் **23** பேருக்கு ரூ. **2,67,466** தொகையும் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

**மாணவர்கள் சேர்க்கைப் பரவல்**

**2020-21** மாணவர் சேர்க்கையில் **18** மாவட்டங்களைச்சேர்ந்த **96** மாணவர்களும் கேரள மாநிலத்திலிருந்து ஒருவரும் ஆக மொத்தம் **97** சேர்க்கை பெற்றனர்.

மாணவர்களின் பரவல் விவரம் **:** சேலம் **-28:;** நாமக்கல் **-20;** ஈரோடு **-18;** திருப்பூர் **-5;** கரூர்**-5;** கிருஷ்ணகிரி **-5 ;** கோயமுத்தூர் **– 3;** திருச்சிராப்பள்ளி **-2;** தேனி **-2;** நீலகிரி **-2;** கள்ளக்குறிச்சி **-2;** பெரம்பலூர் **-2;** திருநெல்வேலி **-1;** அரியலூர் **-1 ;** தூத்துக்குடி **-1;** விருதுநகர்**-1;** திண்டுக்கல் **-1;** கடலூர் **-1;** கேரளா(பாலக்காடு) **-1**

**மேலும் மாணவர்கள் இனவாரி சேர்க்கை விவரம்**:

| OC | | BC | | BCM | | MBC | | SC | | SCA | | ST | | TOTAL | | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | |
| 0 | 2 | 9 | 33 | 0 | 1 | 12 | 25 | 2 | 9 | 3 | 0 | 0 | 1 | 26 | 71 | 97 |

***கல்லூரியில் கொரோனா சிகிச்சை மையம்***


*கல்லூரியில் கொரோனா சிறப்பு சிகிச்சை மையம் இரண்டு கட்டங்களில் அமைக்கப்பட்டது. முதல் கட்டத்தில் அமைக்கப்பட்டபோது கோரோனா தோயாளிகள் யாரும் சிகிச்சைபெறவில்லை.*

*20. 04. 21 முதல் அமைக்கப்பட்ட இரண்டாம் கட்டத்தின் போது 70 க்கும் மேற்பட்டோர் இங்கு தங்கி சிகிச்சை பெற்றனர். எம்.ஜி.ஆர் நூற்றாண்டு கட்டடம் மற்றும் அண்ணா நூற்றாண்டு கட்டடங்களிலும் முதன்மைக் கட்டடத்தின் தரைதள வடக்குப் பகுதியிலும் நூற்றுக்கும் மேற்றபட்ட படுக்கைகள் அமைக்கப்பட்டு இம்முகாம் நடைபெற்றது.*

*பெண்கள் விடுதியின் சில அறைகளில் மருத்துவர்களும் செவிலியர்களும் தங்கி இருந்தனர் . இதனால் முதலாம் ஆண்டு மாணவர்கள்க்கான வகுப்புகள் ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரை ஆன்லைன் முறையில் நடைபெற்றது. செப்டம்பர் 1 முதல் மாணவ மாணவியர் நேரடி வகுப்பில் கலந்து கலந்துகொண்டனர். முதல் பருவத்தேர்வுகளும் ஆன்லைன் முறையிலேயே நடைபெற்றது.*



Scanned with CamScanner



கல்லூரியில் செயல்பட்ட கொரோனா சிகிச்சை மையத்தின் ஒரு பகுதி


**சிறப்பு பழுதுநீக்கம் மற்றும் வண்ணப்பூச்சுப் பணிகள்:**


 

பழைமையான கல்லூரிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு நிதி ஒதுக்கீட்டின் மூலம் பழுது நீக்கம் மற்றும் வண்ணப் பூச்சுப் பணிகள் இவ்வாண்டு கல்லூரியின் முதன்மைக் கட்டடம், அண்ணா நூற்றாண்டு கட்டடம் (எம்.எட் பிளாக்), விடுதிகள், முதல்வர் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டன.



Scanned with CamScanner







புதுப்பொலிவுடன் கல்லூரி மற்றும்
விடுதியின் தோற்றம்



Scanned with CamScanner

## அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம்
## கல்லூரியின் சில வரலாற்றுக் குறிப்புகள்.

**தொகுப்பு : முனைவர் அ.ஜான் பீட்டர், முதல்வர்**

### கல்லூரியின் பெயர்

அரசாணை (பலவகை) எண் 1117 நாள் 23.06.1955 இன் படி அரசினர் பயிற்சிக் கல்லூரி (**Government Training College**) என்ற பெயரில் ஆண்கள் மட்டும் பயிலும் வகையில் இக்கல்லூரி தொடங்கப்பட்டது.

அரசாணை பலவகை எண் 1718 கல்வி (டபிள்யூ) த்துறை நாள் 29.08.1980 இன் படி இக்கல்லூரியின் பெயர் **அரசு கல்வியியல் கல்லூரி** எனத் தமிழிலும் **Government College of Education** என ஆங்கிலத்திலும் மாற்றப்பட்டது

### கல்லூரிக் கட்டடங்கள் திறப்பு

இக்கல்லூரி தொடக்கத்தில் அன்றைய குமாரபாளையம் அரசு ஆண்கள் உயர்நிலைப்பள்ளி வளாகத்தின் ஒருபுறத்தில் தொடங்கி நடத்தப்பட்டது. பின்னர் கல்லூரிக்கான இடம் குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுத் தற்போதைய வளாகத்தில் 13.11.1970 அன்று அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் **எஸ்.ஜே. சாதிக் பாட்ஷா** அவர்கள் கல்லூரிக் கட்டத்திற்கான கால்கோளினை நாட்டினார்.

05.03.1972 அன்று தமிழ் நாட்டின் அன்றைய கல்வி அமைச்சர் நாவலர் டாக்டர் **இரா.நெடுஞ்செழியன்** அவர்கள் புதிய கட்டடத்தைத் (இன்றைய முதன்மைக் கட்டடம்) திறந்து வைத்தார். பிற்பட்டோர் தலத்துறை அமைச்சர் **கே.ராஜாராம்** அவர்கள் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். புதிய கட்டடமானது. ரூ. 6,70,000 திட்ட மதிப்பீட்டில் அப்பொழுது கட்டப்பட்டது. இதில் ரூ.50,000 பல்கலைக்கழக மானியக் குழுவின் பங்களிப்பு அளிக்கப்பட்டது. 23. புதிய கட்டடத்தில் 03.1972 முதல் கல்லூரி செயல்பட்டு 31.03.1972 இல் கல்லூரி செயல்பட்ட பள்ளி வளாகம் பள்ளிநிருவாகத்திடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

### புலவர் பட்டய வகுப்பு

1959 ஆம் ஆண்டு புலவர் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டு 100 மாணவர்கள் ஆண்டுதோறும் பயிற்சி பெற்றனர். இவ்வகுப்பு 1977 வரை தொடர்ந்து நடைபெற்று பின்னர் நிறுத்தப்பட்டு விட்டது.

### எம்.எட் வகுப்பு

1974 ஆம் ஆண்டு முதல் பகுதிநேர எம்.எட் வகுப்புகள் ஆண்டுதோறும் 8 மாணவர்கள் பயிலும் வகையில் தொடங்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு இது முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டது. தேசிய ஆசிரியர் கல்விக் குழுவின் (NCTE) ஆய்வுக்குப் பின்னர் போதுமான ஆசிரியர் நியமனமின்மையால் எம்.எட் அங்கீகாரம் 24.09.2009 நாளிட்ட NCTE கடிதத்தால் ரத்து செய்யப்பட்டது.

அரசாணை (நிலை) எண் 97 உயர் கல்வி (ஜி1) துறை,நாள் 01.03.2011 இன் படி அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளிலும் எம்.எட் வகுப்பு தொடங்க ஆணையிடப்பட்டது. இப்பாடபிரிவுக்கென நான்கு பணியிடங்கள் அந்த ஆணையின் படி ஒப்பளிப்பு



Scanned with CamScanner

செய்யப்பட்டன. ஆயினும் தேசிய ஆசிரியர்க் கல்விக் குழு அங்கீகாரமும் ஆசிரியர் நியமனமுமின்மையால் இக்கல்லூரியில் எம்.எட். மாணவர் சேர்க்கை நடத்தப் பெறவில்லை.

## இருபாலர் கல்லூரியாக மாற்றம்

1990 முதல் இக்கல்லூரியில் பெண்களும் பயிலும் வகையில் .பெண்களுக்கு 50 சத இட ஒதுக்கீடு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டது. (GO (MS) NO 543 EDUCATION(Z1) DEPT. Dt. 16.04.1990)

## பல்கலைக்கழக இணைவு

தொடக்கத்தில் சென்னைப் பல்கலைக்கழக இயைபுடன் 75 மாணவர்களுக்கு B.T என்ற பட்டவகுப்பு நடத்தப்பட்டது. பின்னர் 1969-70 ஆண்டில் 100 மாணவர்களாக உயர்த்தப்பட்டது.

சேலம் பெரியார் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டதையொட்டி 1998-99 முதல் அப் பல்கலைக்கழகத்தின் இணைவுடன் பி.எட் வகுப்புகள் நடத்தப்பட்டன.

2008-2009 முதல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டுத் தமிழ்நாட்டின் அனைத்துக் கல்வியியல் கல்லூரிகளும் அப் பல்கலைக்கழக இணைவுடன் செயல்பட வகைசெய்தபோது இக்கல்லூரியும் அப்பல்கலைக்கழக இணைவைப் பெற்றது.

## மையக் கலந்தாய்வின் வழி ஒற்றைச்சாளர சேர்க்கை .

2008-09 முதல் மநில அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு மையக் கலந்தாய்வு முறையில் பி. எட் சேர்க்கை நடத்தப்படுகிறது. மையக் கலந்தாய்வில் பங்கு பெற்று கல்லூரிக்க:.ச் சேர்க்கை ஆணை பெற்ற மாணவர்கள் இக்கல்லூரியில் சேர்க்கப்படுகின்றனர்.

## கல்லூரியின் பரப்பளவு

அரசினர் பயிற்சிக்கல்லூரி அமைக்கப்பட்ட போது, திருச்செங்கோடு தாலுக்கா குமாரபாளையம் அக்ரஹாரம் கிராமத்தில் 25.நாட்டுக்குட்டைத்தார், 26.புளியந்தார், 32.பெரியவீரக்குட்டைத்தார் என்ற பெயருடைய இடங்களில் முறையே 5.56, 4.01, 10.42 பரப்பளவில் மொத்தம் 19.99 ஏக்கர் நிலம் GO (MS) NO 2273 EDUCATION AND PUBLIC HEALTH DEPARTMENT DATED 27.10.1960 இன் படி கல்லூரிக்கென நில ஆர்ஜிதம் செய்து வழங்கப்பட்டது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பயன்பாட்டிற்கென 60 சதுரமீட்டர் இடம் 0.90 ஏக்கர் கல்லூரிக்கல்வித்துறை ந.க எண் 83936 எ1(2) \80 நாள் 18.12.84 இன் படி வழங்கப்பட்டது.

கல்லூரியின் தென்மேற்குப் பகுதியில் ஆக்கிமித்துக் கட்டப்பட்ட சிவன் கோயில் தொடர்புடைய வழக்கில் ஒரு சார்பாக வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் கல்லூரியின் சுமார் 1 ஏக்கர் பரப்பளவு இடத்தைக் கைவிட நேர்ந்தது

நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க எண் 10805 \ 2013 (எல்2) நாள் 11.05.2013 இன் படி கல்லூரியின் வளாகத்திலிருந்து 9.34 ஏக்கர் நிலம் பிரிக்கப்பட்டு அந்த இடத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி செயல்பட 10.01.2014 அன்று கட்டடக் கால்கோள் விழா நடத்தப்பட்டது. இதனால் கல்லூரியின் பின்புறம் அமைந்த இடங்களும் வடபகுதியில் அமைந்த இடமும் அரசு கலை அறிவியல் கல்லூரி வசமானது.

இதனால் கல்லூரியின் தற்போதைய பரப்பளவு 9.23 ஏக்கர் என்ற அளவில் குறைந்தது.

## கல்லூரியின் கட்டடங்கள்



Scanned with CamScanner

கல்லூரியில் பல்வேறு ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டடங்களும் அதன் பரப்பளவும் பின் வருமாறு: (அளவுகள் சதுர மீட்டரில் )

| எண் | கட்டடத்தின் பெயர் | கட்டப்பட்ட ஆண்டு | பரப்பு ச.மீ | போர்டிகோ | ஹெட்ரூம் |
|---|---|---|---|---|---|
| 1 | முதன்மைக் கட்டடம் தரைத் தளம் | 1973 | 1796.21 | | |
| 2 | முதன்மைக் கட்டடம் முதல் தளம் | 1985 | 537.75 | | |
| 3 | அண்ணா நூற்றாண்டு கட்டடம் | 2009 | 342 | | |
| 4 | கருத்தரங்க கட்டடம் | 2018 | 397.72 | 15.12 | 24.18 |
| 5 | எம்.ஜி.ஆர் நூற்றாண்டு கட்டடம் | 2019 | 326.04 | 19.89 | |
| 6 | எம்..ஜி.ஆர் நூற்றாண்டு கட்டடம் முதல் தளம் | 2019 | 326.04 | | 35.10 |
| 7 | ஆண்கள் விடுதி | 1985 | 395.08 | | |
| 8 | பெண்கள் விடுதி | 1985 | 1361.23 | | |
| 9 | முதல்வர் குடியிருப்பு | 1980 | 128.15 | | |
| 10 | பணியாளர் குடியிருப்பு | 1980 | 133.13 | | |
| 11 | கிணறு | 1972 | 13.20 | | |
| 12 | மோட்டார் அறை | 1980 | 8.41 | | |
| 13 | பம்ப் அறை போர்வெல் | 1972 | 12.60 | | |

## மண்டலக் கல்லூரிக் கல்வி இயக்கக இணைவு

கோயமுத்தூர் மண்டலக் கல்லூரிக்கல்வி இயக்குநரகம் பிரிக்கப்பட்டு, 2016 முதல் தருமபுரி மண்டலக் கல்லூரிக்கல்வி இயக்குதரகம் தொடங்கப்பட்டு அம்மண்டலத்தின் இக்கல்லூரி இணைக்கப்பட்டது.

## இரண்டாண்டு வகுப்புகளாக மாற்றம்

2015 - 16 ஆம் ஆண்டு முதல் தேசிய ஆசிரியர் கல்வி குழுமத்தின் 2014 விதிகளின் படி பி.எட் மற்றும் எம்.எட் வகுப்புகள் இரண்டாண்டு வகுப்புகளாக மாற்றப்பெற்றன.

## கல்லூரி விடுதி

கல்லூரியின் விடுதி தொடக்கக் காலத்தில் ஏறத்தாழ 50 மாணவர்கள் சேர்க்கையுடன் காவிரிக் கரையில் இருந்த அப்புராயர் சத்திரத்தில் நடைபெற்றது. மாணவர்களுக்கான மதிய உணவு குதிரை வண்டியின் மூலமாகக் கல்லூரி வளாகத்திற்குத் தினமும் எடுத்துவரப்பட்டது. மேலும் பாதுகாக்கப்பட்ட குடிநீரை எஸ்.எஸ்.எம் அறக்கட்டளையின் சார்பில் இலவசமாக வண்டியில் கொணர்ந்து அப்புராயர் சத்திரத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. கல்லூரியின் தற்போதைய வளாகத்தில் ரூ.10,00,000 மதிப்பீட்டில் விடுதி கட்டப்பட்டு 1983-84 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வரும் வரை அப்புராயர் சத்திர விடுதி செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.

1990 இல் பெண்கள் கல்வி கற்க ஆணை வழங்கப்பட்டதையொட்டி 50 மாணவிகள் தங்கும் வகையில் பெண்களுக்கான விடுதியும் தனியே கட்டப்பட்டது. கல்லூரியின் தென்புற விடுதி (குறிஞ்சி இல்லம்) பெண்கள் விடுதியாகவும் வடபுற விடுதி (காவிரி இல்லம்) ஆண்கள் விடுதியாகவும் தொடக்கத்தில் செயல்பட்டது.. பெண்கள் அதிக எண்ணிக்கையில் விடுதியில் சேர்ந்தததை அடுத்து இடப் பற்றாக்குறையைச் சமாளிப்பதன் பொருட்டு குறிஞ்சி இல்லம் ஆண்கள் விடுதியாகவும் காவிரி இல்லம் பெண்கள் விடுதியாகவும் ஜூன் 2018 முதல் மாற்றப்பட்டன.

(விடுதியை அடையாளப்படுத்த எளிமை கருதி , இப்பகுதியின் நிலவியல் தன்மையைச் சிறப்பிக்கும் வகையில் இவ்விரு விடுதிக்கும் காவிரி , குறிஞ்சி இல்லங்கள் என 2022 இல் பெயரிடப்பட்டது.)



Scanned with CamScanner